அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 10/89

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
1989 பெப்ருவரி 9ஆம் திகதி.

அரசாங்க அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்

**ஒரு இடைக்கால நடவடிக்கையாக மத்திய அமைச்சுக்களிலும்/ திணைக்களங்களிலுமிருந்து அரசாங்க உத்தியோகத்தர்களை மாகாண சபைகளுக்கு விடுவித்தல்**

ஒரு இடைக்கால நடவடிக்கையாக, மாகாண சபைகள் செயற்படுவதை இயலச் செய்வதற்காக மத்திய அமைச்சுக்களிலிருந்தும்/ திணைக்களங்களிலிருந்தும் அரசாங்க உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஆகவே அந்தந்த மாகாணசபையினால் அதற்கு பாரிக்கப்பட்ட கருமங்களைப் புரிவதற்காக வேண்டப்படும் உத்தியோகத்தர்களை உங்களது அமைச்சிலிருந்து/திணைக்களத்திலிருந்து விடுவிக்குமாறு தங்களிடம் கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

02. அந்தந்த மாகாண சபையினால் எந்த உத்தியோகத்தர்களின் சேவை வேண்டப்படுகின்றதோ அந்த உத்தியோகத்தர்களை இனம் கண்டறிந்தபின் ஒவ்வொரு மாகாண சபையின் பிரதான செயலாளரும் தேவைப்படும் உத்தியோகத்தருடைய பெயரையும், பதவிப்பெயரையும் குறித்து உங்களுக்கு அனுப்புவார். இணைந்த சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் (பதவிநிலை, பதவிநிலை சாராதோர்கள்) தொடர்பாக, பிரதம செயலாளர்கள் எமது அமைச்சிற்கு அறிவிப்பார்.

03. அவ்வாறு மாகாண சபைகளுக்கு விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுடைய நியதிகளும் நிபந்தனைகளும் இடைக்காலத்தில் மாற்றமின்றி அமையும். அவர்கள் மத்திய அமைச்சில்/திணைக்களத்தில் வகிக்கும் பதவிக்கு ஏற்புடைத்தான நியதிகளையும், நிபந்தனைகளையும் தொடர்ந்து பெறுவர்.

மாகாண சபைகளினால் வேண்டப்படும் தங்களது அமைச்சை/திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுடைய பெயர்கள், பதவிப்பெயர்களின் விபரங்கள் கிடைத்த உடன் அந்த உத்தியோகத்தர்கள் ஒவ்வொருவருக்கும் இத்துடன் இணைக்கப்பட்ட மாதிரிப் படிவத்தில் ஒரு கடிதம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவும்.

04. தங்களது அமைச்சிலிருந்து/திணைக்களத்திலிருந்து உத்தியோகத்தர் ஒருவரை மாகாண சபைக்கு விடுவித்தல் தொடர்பில் ஏதேனும் பிரச்சினை அல்லது கஷ்டம் இருந்தால் அதுபற்றி உடனடியாக எமது கவனத்திற்குக் கொண்டுவரப்படல் வேண்டும்.

ஒப்பம்/ அநில் கமகே
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.

திரு/திருமதி/செல்வி.......................

.......................

(பதவி)

..............................

மாகாண சபையுடன் சேவை செய்வதற்காக
விடுவித்தல்

---

அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல.. 10/89 ....... என்படி .................... மாகாண சபையுடன் சேவை செய்வதற்காக உங்களை ................ திகதி தொடக்கம் திரும்ப அறிவிக்கும்வரை விடுவித்தல் செய்யப்பட்டதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றேன்.

02. ........................ மாகாண சபையுடன் நீங்கள் வேலை செய்யும் இந்த இடைக்காலத்துள் உங்களுடைய குறித்த பதவிக்குரிய நியதிகளையும், நிபந்தனைகளையும் தொடர்ந்து பெறுவீர்கள் என நம்புகிறேன்.

03. இக்கடிதம் கிடைத்தது பற்றி உறுதிப்படுத்தவும்.

செயலாளர்/திணைக்களத்
அமைச்சு தலைவர்.

பிரதி:- ........................
மாகாண சபை பிரதான செயலாளர்.